## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண்.46/2019</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2022 ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 12.09.2022**

**பெயர் - சரவணன்**

**த/பெ - துரைசாமி**

**வயது - 50**

**சாட்சி - PW1**

**ஊர் - அலமாதி**

**விசாரணை தொடங்கும் நேரம்- 12:09 p.m.**

**<u>முதல் விசாரணை</u> -**

1. நான் இவ்வழக்கின் முதல் வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமான பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. (1) 30.06.1955 தேதியிட்ட செட்டில் மென்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **<u>(வாசா ஆ 1 )</u>** ஆகவும்,

(2) 10.02.2005 தேதியிட்ட செட்டில் மென்ட் பத்திரம் ஆவண எண் 684/2005 பதிவு அலுவலகம் சார்பதிவாளர் செங்குன்றம் சான்றிட்ட நகல் **<u>(வாசா ஆ 2 )</u>** ஆகவும்,

(3) 12.08.2019 தேதியிட்ட எனது வழக்கறிஞர் மூலம் நானும் இதர வாதிகளும் பிரதிவாதிகளுக்கும் சோழவரம் காவல் ஆய்வாளருக்கும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவல நகல் **<u>(வாசா ஆ 3 )</u>** ஆகவும்,

(4) மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை முதல் பிரதிவாதி பெற்றுக்கொண்டைமைக்கான அஞ்சல ஒப்புகை அட்டையின் அசல் **(வாசா ஆ 4 )** ஆகவும்,

(5) மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை இரண்டாம் பிரதிவாதி பெற்றுக்கொண்டைமைக்கான அஞ்சல ஒப்புகை அட்டையின் அசல் **(வாசா ஆ 5 )** ஆகவும்,

(6) மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை மூன்றாம் பிரதிவாதி பெற்றுக்கொண்டைமைக்கான அஞ்சல ஒப்புகை அட்டையின் அசல் **(வாசா ஆ 6 )** ஆகவும்.

(7) மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை காவல் ஆய்வாளர் சோழவரம் காவல் நிலையம் பெற்றுக்கொண்டைமைக்கான அஞ்சல ஒப்புகை அட்டையின் அசல் **(வாசா ஆ 7 )** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடியும் நேரம்- 12:22 p.m.**